## பெலாரஸ்



# வாழ்க்கையை மாற்றின நாள்

*அந்த ஓய்வுநாளுக்கு பிறகு, ஒவ்வோர் ஓய்வுநாளிலும் ஆலயத்திற்குச் சென்றான்.*

பெலாரஸில் வாடிமின் அம்மாவும் சகோதரியும் கார் விபத்து ஒன்றில் மரித்த சமயத்தில் அவருக்கு 14 வயது.

அந்தப் பேரிழப்புக்கு பிறகு அப்பா தேவனைத் தேட ஆரம்பித்தார். செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சுவிசேஷக்கூட்டங்களில் கலந்துகொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்.

அது 1990 களில் நடந்தது; அது முன்னாள் சோவியத் யூனியனில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான பொற்காலமாக இருந்தது. 1991ம் ஆண்டு சோவியத் யூனியன் வீழ்ந்ததால், மதச்சுதந்தரத்திற்கான கதவு திறந்தது; பெலாரஸ், ரஷ்யா, முன்னாள் சோவியத் குடியரசுகள் நெடுகிலும் சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

அப்போது வாடிமுக்கு 15 வயது. அப்பாவிடம், அவர் விரும்புகிற எதை வேண்டுமானாலும் செய்ய தயாராக இருப்பதாகவும், ஆனால் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபைக்கு மட்டும் செல்ல விரும்பவில்லை என்றும் விக்டர் சொன்னான்.

“உங்களுடைய சபைக்கு நான் வரமாட்டேன்” என்று சொன்னான். அப்பா ஒன்றுமே சொல்லவில்லை.

நான்கு மாதங்கள் கழித்து, ஒரு ஓய்வுநாள் காலை வேளையில், அவனை தன்னுடன் ஆலயத்திற்கு வரும்படி அப்பா அழைத்தார். ஆனாலும் வாடிம் தன் மனதை மாற்றிக்கொள்ள வில்லை.

“எனக்கு விருப்பமில்லை, நான் வரமாட்டேன்” என்று சொன்னான்.

ஆனால் அப்பா விடுவதில்லை. வாடிமுக்கு ஆலயத்திற்குச் செல்ல விருப்பமில்லாமல் இருந்தாலும், அவனுக்கு ஒரு ஆசை பிரதானமாக இருந்ததை அறிந்திருந்தார். கணினி நிரலாக்கப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தான்; அதனால் சொந்தமாக ஒரு கணினியை வாங்க வேண்டுமென விரும்பினான்.

சொந்தமாக கணினி வைத்திருக் கிற ஒரு பெண்ணை செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையில் தனக்கு தெரியும் என்று அப்பா சொன்னார்.

“அதை அவர் எவ்வாறு வாங்கினாரென அவரிடம் கேட்கலாம்” என்று சொன்னார்.

வாடிம் ஆலயத்திற்குச் சென்றான்.

ஆனால் சபை அங்கத்தினர்கள் ஒரு பாட்டியின் வீட்டில்தான் ஆராதனைக்காகக் கூடியிருந்தார்கள்; ஆராதனை செய்வதற்காக ஒரு பெரிய மேசையைச் சுற்றிலும் இருந்தார்கள்; அதைப்பார்த்து அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அங்கு சென்றதும் வாடிம் தன் அப்பாவிடம், “அந்தப் பெண் எங்கு இருக்கிறார்? நான் அவரிடம் பேசவேண்டும்” என்று மெதுவான குரலில் கேட்டான்.

“ஆராதனை முடிந்த பிறகு அவரிடம் பேசுவோம்” என்று அப்பா சொன்னார்.

ஆராதனை முழுவதும் அங்கு இருக்கவேண்டும் என்பது வாடிமின் எண்ணமில்லை. அந்தப் பெண்ணைச் சந்தித்து விட்டு, உடனே வெளியேற நினைத்திருந்தான்.

ஓய்வுநாள் பள்ளியிலும், பிறகு தெய்வீக ஆராதனையிலும் கலந்து கொண்டபோது, விசுவாசிகள் பாடல் பாடி ஆராதனை செய்ததை முதன் முறையாகப் பார்த்தான். பிரசங்க ம் செய்வதர், தாவீதுக்கும் யோனத் தானுக்கும் இடையே இருந்த விசேஷித்த நட்புபற்றிப் பேசினார்; அதையும் அன்றுதான் முதன்முதலாகக் கேட்டான்.

ஆராதனை முடிந்தபோது, தான் ஆலயத்திற்கு வந்த நோக்கத்தையே வாடிம் மறந்திருந்தான். கணினி வைத்திருந்த பெண்ணிடம் பேச விரும்பவில்லை. அங்கு அவன் பார்த்த, கேட்ட விஷயங்கள் அவனது இருதயத்தைத் தொட்டிருந்தன.

அந்த ஓய்வுநாளுக்கு பிறகு, ஒவ்வோர் ஓய்வுநாளிலும் ஆலயத்திற்குச் சென்றான். ஓய்வுநாளைக் கைக்கொள்ளத் தொடங்கினான். வேதாகமத்தையும், எலன் ஒய்ட் எழுதின போராட்ட வரிசை புத்தகங்களையும் வாசித்தான். ஒரு புதிய மனிதனாக மாறினான்.

ஒரு ஆராதனை வேளை அவனது வாழ்க்கையை மாற்றியது. கணினி எவ்வாறு வாங்கவேண்டும் என்பதைக் கேட்பதற்காக ஆலயத்திற்கு வந்தான்; ஆனால் ஒரு புதிய மனிதனாகத் திரும்பிச் சென்றான்.

ஒரு வருடம் கழித்து, தனது 16வது வயதில், தன் வாழ்க்கையை இயேசுவிடம் அர்ப்பணித்து, ஞானஸ்நானம் பெற்றான்.

அடுத்த வருடத்தில், போதகர் படிப்புக்காக ரஷ்யாவில் உள்ள

சாவோவ்ஸ்கி அட்வென்டிஸ்ட் பல் கலைக்கழகத்திற்குச் சென்றான்.

இன்று, வாடிம் டெர்காச் ஒரு போதகராகவும், பெலாரஸின் செவந்த் - அட்வென்டிஸ்ட் சபையின் ஒரு தலைவராகவும் இருக்கிறார். சபை கான்ஃபரன்ஸுகளுக்கான பெலாரஸ் ஒன்றியத்தில் நிர்வாகச் செயலராகப் பணியாற்றுகிறார்.

ஒரு கணினி வாங்குகிற அவரது ஆசை என்னவா னது?

“கணினி வாங்கினேன், ஆனாலும் பிற்பாடு வாங்கினேன்” என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் பெலாரஸைக் காட்டுங்கள். பிறகு, இந்தக் காலாண்டு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையால் பயனடையப் போகிற மின்ஸ்க் இருக்கிற இடத்தைக் காட்டுங்கள்.
- விக்டர் பாடுகிற பாடலைக் கேட்க: bit.ly/Viktor1-ESD.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- யூரோ ஆசியா டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/esd-2024.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் “ஐ வில் கோ“ என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, “தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்”.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 6, ‘குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்’.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 7, “இளைஞர்கள் ஆண்டவருக்கு முதலிடம் கொடுப்பதற்கும், வேதாகம உலகக் கண்ணோட்டத்தை எடுத்துக்காட்டுவதற்கும் உதவவேண்டும்.”
- பெலாரஸின் 40 சதவீதப் பகுதி வனப்பகுதியாகும்.
- நிலவாழ் பாலூட்டிகளில் மிகப்பெரிய மிருகமான ஐரோப்பிய காட்டெருமை பெலாரஸில் தான் உள்ளது. அது பெலாரஸின் தேசிய மிருகமாகும்.
- பெலராஸைச் சேர்ந்த ஐந்துபேர் நோபிள் பரிசு பெற்றிருக்கிறார்கள். 1971ம் ஆண்டு சைமன் கஸ்நெஸ்ட்ஸ் பொருளாதாரத்திற்காகப் பெற்றார். மெனாகம் பிகின் 1978ம் ஆண்டு சமாதானத்திற்காகப் பெற்றார். சைமன் பெரேஸ் 1994ம் ஆண்டு சமாதானத்திற்காகப் பெற்றார். ஷோர்ஸ் ஆல்ஃபெரோவ் 2000ம் ஆண்டு இயற்பியலுக்காகப் பெற்றார். ஸ்வெட்லானா அலெக்ஸிவிச் 2015ம் ஆண்டு இலக்கியத்திற்காகப் பெற்றார்.